**செய்தி வெளியீடு எண் : 1431** **நாள் : 19.07.2023**

**நான் முதல்வன் திட்டம் குறித்து மாண்புமிகு இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்களுடன் கலந்துரையாடினார்.**

கள்ளக்குறிச்சி மாவட்டம் நீலமங்கலம் ஏ.கே.டி பள்ளி கூட்டரங்கில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நான் முதல்வன் திட்டம் குறித்து பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களுடன், மாண்புமிகு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள், சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள். மாண்புமிகு பள்ளி கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப., சிறப்பு திட்ட செயலாக்கத்துறை செயலாளர் மரு.தாரேஸ் அகமது இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஷ்ரவன் குமார். இ.ஆ.ப., ஆகியோர் முன்னிலையில் இன்று (19.07.2023) கலந்துரையாடினார்.

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசு பொறுப்பேற்றதிலிருந்து இரண்டு கண்களாக பார்ப்பது, சுகாதாரம் மற்றும் பள்ளிக் கல்வித்துறையை தான். பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயின்றவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தருவதற்காக நான் முதல்வன் திட்டம் கொண்டுவரப்பட்டது. ஒவ்வொரு மாணவரும் தனது துறையில் முதல்வனாக திகழ வேண்டுமென்பதே நான் முதல்வன் திட்டத்தின் நோக்கம். இத்திட்டத்தின் கீழ் 14 லட்சம் மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தில் பயிற்சி பெற்ற கலை அறிவியல் கல்லூரியைச் சேர்ந்த 1.425 மாணவர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது. பள்ளி, கல்லூரி மாணவர்கள் வருங்காலத்தில் தொழில் முனைவோராகவும், தொழில் வல்லுநராகவும் உருவாகிட இத்திட்டம் உறுதுணையாக இருக்கும்.

மாணவர்களின் தனித்திறமையை வெளிக்கொண்டு வந்து, வேலையில்லாத நிலையை மாற்றிடவே நான் முதல்வன் திட்டம் கொண்டுவரப்பட்டது. அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் அதன் உறுப்பு கல்லூரிகளில் நான் முதல்வன் திட்டத்திற்கென கல்லூரி ஒன்றிற்கு ரூ.70 லட்சம் வீதம் ரூ.21 கோடியே 70 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கைவினை பொருட்கள் செய்யும் தொழிலில் ஈடுபடும் இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் ரூ.5 கோடி செலவில் கைவினை பொருட்கள் தயாரிப்பதற்கான பயிற்சி மையம் அமைக்கப்பட உள்ளது.

மாணவர்களின் கற்றலை அதிகரிக்க விளையாட்டு முறை கற்றலை ஊக்குவிக்கும் வகையில் ரூ.1 கோடி செலவில் 1,000 பள்ளிகளில் விளையாட்டு முறை கற்றல் செயல்படுத்தப்படவுள்ளது. தமிழ்நாடு திறன் பயிற்சி மையங்களில் பயில்பவர்களுக்கு பயிற்சி சான்றிதழ் வழங்கப்படவுள்ளது. மாணவர்கள் பாடங்களை படித்து, மதிப்பெண் பெறுவதோடு நின்று விடாமல் பல்வேறு திறன்களை வளர்த்துக்கொள்வதற்கு நான் முதல்வன் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

நான் முதல்வன் திட்டத்தின்கீழ் ஆர்டிபிஷியல் இன்டலிஜன்ஸ், மிஷன் லேர்னிங் உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்பங்களை திறன் பயிற்சியில் வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொருவரின் தனித்திறமையை கண்டறிந்து அதனை ஊக்கப்படுத்துவதே நான் முதல்வன் திட்டத்தின் தனிச்சிறப்பு. நான் முதல்வன் திட்டத்தின்கீழ் திறன் பயிற்சிகளை வழங்க அந்தந்த கல்லூரி பேராசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர். இதற்கென பேராசிரியர்களுக்கு தனி பயிற்சி வழங்கப்பட உள்ளது. இதுபோன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். அரசு திட்டங்களின் வெற்றி என்பது அதனால் அடையும் பயனை பொருத்து அமையும். நான் முதல்வன் திட்டத்தினை மாணவர்கள் அனைவரும் பயன்படுத்திகொள்ள வேண்டுமென மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

பின்னர் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் மாணவர்களுடன் திறன் பயிற்சி, வேலைவாய்ப்புகள் மற்றும் நான் முதல்வன் திட்டம் குறித்து கலந்துரையாடினார்.

தொடர்ந்து, சின்னசேலம் இலங்கை அகதிகள் முகாமில் உள்ள 10 மாணவர்களுக்கு திறன் பயிற்சிக்கான சான்றிதழை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ந.மோகன்ராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.நா.சத்தியநாராயணன், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் திரு.வசந்தம்.க.கார்த்திகேயன், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.தா.உதயசூரியன், அனைத்து துறை அரசு அலுவலர்கள், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in